# பாடசாலைக் கலைசார் கல்விச்செயற்பாட்டில் சிறுவர்களுக்கான வசந்தன் கூத்தின் முக்கியத்துவம்

**திருமதி. துக்ஷ்யந்தி சத்தியஜித்**

**உதவி விரிவுரையாளர்இ**

நுண்கலைத்துறைஇ கலைகலாச்சாரப ீடம்இ கிழக்குப்பல்கலைக்கழகம்.

*email add: achchu281@yahoo.com*

**ABSTRACT(ஆய்வுச்சுருக்கம்)**

கல்வி என்பது அடிப்படையானதும் அத்தியாவசியமானதுமான செயற்பாடாகும்.இதனுள் பாடசாலைக்கல்வி குறிப்பிட்டு கூறத்தக்கது. ஏனெனில் சிறுவர்கள் தமக்கான அறிவினை, ஆளுமையினை, திறன்களை பெற்றுக்கொள்ளவும், வெளிப்படுத்தவும், வளர்த்துக் கொள்ளவும் சிறந்த களமாக பாடசாலை விளங்குகின்றது.

பாடசாலைக்கல்வி என்பதனுள் பாடத்திட்டங்களை கற்பித்தல், விளையாட்டுக்களின் கற்பித்தல், கலைகளை கற்பித்தல் என்பன அடங்குகின்றன.இவற்றுள் கலைகள் சாா்ந்த விடயங்கள் அழகியல் கற்கைகளுக்கூடாக கற்பிக்கப்படுகின்றன.இவ் அழகியல் கற்பித்தல்களும் கூட மட்டுப்படுத்தப்பட்டவையாகவே பாடத்திட்டங்களில் காணப்படுகின்றன.சமூகங்களை அடையாளப்படுத்தும் சமூகம் சாா் கலைகளை கற்பித்தல் சாா்ந்து திட்டமிடுதல் அவசியாகின்றது.சமூகங்களை பிரதிபலிக்கும் கலைகளை கற்கும் போது அவற்றிற்கு பரீட்சயமாவதுடன் அதனை அடுத்த கட்டத்திற்கு நகா்த்துவதற்கான அல்லது முன்னெடுப்பதற்கான அறிவும் தெளிவும் திறனும் கூடியவா்களாக சிறுவா்கள் உருவாகிறாா்கள்.சமூகம் சாா்ந்த பிரக்ஞை ரீதியிலான கற்றல் என்பது அவசியமானதும் தவிா்க்க முடியாததுமாகும். கல்வி எனும் புள்ளியில் தான் தனி மனிதா் சமூகத்துடன் சங்ககமமாகின்றனா்.கல்வியின் பரிமாணமானது சமூக மாற்றத்துக்குரிய கருவியாகவும் சமூக ஈடேற்றத்துக்குரிய கருவியாகவும் இயங்குதலாகும்.

குறிப்பாக வசந்தன் கூத்துப் பற்றிக் கூறின் அது சிறுவா்கள் மாத்திரம் பங்கேற்கும் தமிழரின் பாரம்பரியக் கலை வடிவமாகும்.அதிலும் 12-14 வயதிற்குற்பட்ட ஆண் சிறுவா்கள் மாத்திரமே பங்கு கொள்ள முடியும். இதில் பெண் சிறுவா்கள் பங்கு கொள்ளும் மரபு இல்லை.இக் கலை வடிவம் குறிப்பாக கோயிலை மையப்படுத்திய கலை வடிவமாகையால் பெண் சிறுவா்கள் இணைத்துக் கொள்ளப்படாமைக்கு சில காரணங்கள் சமூகத்தவா்களால், இக்கலை முன்னெடுப்பாளா்களால் முன்வைக்கப்படுகின்றன..இதனால் சிறுவா்களுக்குரிய ஒரே ஒரு கலை வடிவம் சிறுவா்களின் ஒரு பகுதியினருக்கு பரீட்சயமாகாத வடிவமாகவே காணப்படுகின்றது.இக் கலையினை பாரம்பரியமாகக் கொண்டிருக்கும் கிராமங்களில் இந்நிலையே காணப்படுகின்றது.(உதாரணம்:களுதாவளைக் கிராமம்) ஆனால் சிறுவா்களுக்கான கலை வடிவத்தினை பயில்வதற்கும் அதனை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்குமான பாரபட்சமற்ற பால்நிலை சமத்துவ ரீதியில் கற்கும் உரிமையினை சிறுவா்களுக்கு வழங்க வேண்டியது சமூகத்தினது கடமையும் பொறுப்புமாகும்.

பொதுவாக பால்நிலை பற்றிய எண்ணப்பாட்டினை எடுத்துக் கொண்டால் சமூகம் வரையறுக்கும் தன்மையே பால்நிலை ஆகும்.சமூகச் சூழலாலும் பண்பாட்டு பின்னணிகளாலும் தான் ஆண்மை, பெண்மை என நாம் பிரித்துப் பாா்க்கின்றோம்.இந்த நிலை ஆண்களின் உலகம் வேறு பெண்களின் உலகம் வேறு என மனித இனத்தை இரண்டாகப் பாா்ப்பதன் மூலம் உருவாகிய கருத்துருவாக்கமாகும்.ஆணையும் பெண்ணையும் இயற்கை படைக்கிறது.ஆனால் அதை ஆண்மையாகவும் பெண்மையாகவும் சமூகமே மாற்றியமைக்கின்றது.இத்தகைய பின்புலங்கள் சிறுவா்களிலும் ஆதிக்கம் செலுத்துவதன் பின்விளைவே இவ் வசந்தன்கூத்து கற்பதில் இருக்கும் தடைகளாக காணப்படுகின்றன.

எனவே தடையான காரணிகளை கண்டறிவதற்காகவும் பாடசாலை திட்டத்தின மூலம் இக்கலையினை பரவலாக்குதல் தடையின்றி சிறுவா்கள் அனைவரும் அவா்களுக்கேயுரிய கலையினை பயில்வதற்கும் அதனை சமூகம் சாா்ந்து பிரயோகிப்பதற்குமான சாத்தியப்பாடுகளை இவ் ஆய்வு முன்வைக்கின்றது. அந்த வகையில் சிறுவா்களுக்கு பயிற்றுவிக்கும் விதத்திலும் அறிவூட்டும் விதத்திலும் அதனூடாக சமத்துவப்பண்பை ஏற்படுத்தவும் சமூகக்கலைகள் மூலம் சமூகம் சாா்ந்து சிந்திக்கவும் செயற்படவும் தூண்டும் நோக்கில் சிறுவா்களை மையப்படுத்திய வசந்தன் கூத்தினை பாடசாலை கல்விசாா் கலைத்திட்டத்தினுள் உள்வாங்குவதன் அவசியங்களை இவ் ஆய்வு கண்டுள்ளது.

Keywords (திறவுச்சொற்கள்) – கல்வித்திட்டம், வசந்தன்கூத்து, சிறுவா்கள், பால்நிலைசமத்துவம், ஆளுமை விருத்தி

**அறிமுகம்**

வசந்தன்கூத்து மட்டக்களப்புப் பிரதேசத்தில் காணப்படும் பாரம்பரிய கலை வடிவங்களுள் ஒன்றாகும்.கண்ணகி அம்மன் சடங்கினை மையமாகக்கொண்டு இக் கூத்து வருடாவருடம் நிகழ்த்தப்படுகிறது.ஆண் சிறுவர்கள் கைகளில் இரு தடிகள் கொண்டு ஆடல்,பாடல் மூலம் 63 வகை வசந்தன்களுள் சில வசந்தன் (குறிப்பாக 16) நிகழ்த்துகைகளை நிகழ்த்துவது வழக்கமாகும். நேர்த்திக்கடனாக, விளையாட்டாக அறிவூட்டுவதான அம்சங்களை உடையதாக வசந்தன் கூத்து காணப்படுகின்றது.ஆனால் பெண் சிறுவர்கள் பாரம்பரியமாக இக் கலை ஆற்றுகையில் அனுமதிக்கப்படுவதில்லை. வசந்தன் கூத்துப்பற்றிப் பல கருத்துக்களை தமது நூல்களில் கூறியுள்ள அறிஞர்கள் கூட இக்கலை மரபில் சிறுவர்களிடையேயான இந்த பாரபட்சம் பற்றி கருத்து கூறினார்களில்லை. எனவே ஆண்,பெண் இருபால் சிறுவர்களுக்கும் இக் கலையினை பொதுமைப்படுத்துவது என்பது அவசியமானதாகவும் ஆய்வின் நோக்கமாகவும் காணப்படுகின்றது. இதற்கு சிறுவர்களை பிரதானமாக கொண்ட பாடசாலையே சிறந்த களமாகும்.இயல்பாகவே சிறுவர்கள் எனப்படுவோர் ஆடல் பாடல் விளையாட்டுக்களில் ஆர்வம் உடையவர்களாக காணப்படுகின்றனர்.இவ் இயல்புடைய சிறுவர்களை சமுதாயமயப்படுத்த வசந்தன் கூத்துப்போன்ற கலைகள் முக்கியமானவையாகும்.எனவே சிறுவர்களுக்குரிய பாடசாலை கல்விசார் கலைத்திட்டத்தினுள் இக்கலை வடிவங்களை முறையாக வடிவமைக்கும் பொழுது சிறுவர்களிடையே பேதமின்றி இக்கலை வடிவம் அவர்களை சென்றடையும்.இதனால் ஆண் பெண் இருபால் சிறுவர்களும் உடல் வலிமை மற்றும் ஆளுமை விருத்திகளை பெற்றுக்கொள்வதுடன் சிறுவர்களுக்கு அறிவூட்டும் விதத்திலும் அதனூடாக சமத்துவ பண்பை ஏற்படுத்தவும்,சிறுவர்களை சமூகக்கலைகள் மூலம் சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டும் விதத்தில் சமூகம் சார்ந்து சிந்திக்கவும், செயற்படவும் தூண்டும் நோக்கில் வசந்தன் கூத்தினை சிறுவர்களுக்கு பாடசாலை கல்வி சார் கலைத்திட்டத்தினுள் உள்வாங்கி கற்பிப்பதன் மூலம் செயற்படுத்துவது உறுதி எனலாம்.

**முறையியல்**

களஆய்வுமுறை

தர்க்கரீயான பண்புசார் விபரண முறையியல்கள்

இவ் ஆய்வு வசந்தன் கூத்தினை பாரம்பரியக் கலை வடிவமாகக் கொண்ட மட்டக்களப்பின் களுதாவளைக் கிராமத்தினை அடிப்படையாகக் கொண்டது.

**ஆய்வின் உரையாடலும் பெறுபேறும்**

வசந்தன் கூத்தானது பாரம்பரியமாக கிராமங்களில் ஆண் சிறுவர்களுக்கே பயிற்றுவிக்கப்படுகின்றது.பெண் சிறுவர்கள் இக்கூத்தில் உள்வாங்கப்படுவதில்லை. இதற்கு காரணங்கள் கூறப்படுகின்றன.

1) சமய ரீதியான காரணம்
2) சமூகத்தின் மரபு ரீதியான காரணம்

இக் காரணங்களை கூறுபவர்களும், தடைகளுக்கு உட்படுத்தப்படாதவர்களும் ஆண்களாகவே காணப்படுகின்றனர்.

**சமய ரீதியான காரணம்**

சமய ரீதியான காரணங்கள் எனும் போது வசந்தன் கூத்தானது கண்ணகி அம்மன் வழிபாட்டோடு தொடர்புடையது என்பது அறிந்ததே. கண்ணகி அம்மன் கோயில் சடங்கின் போது கோயில் முற்றத்தில் வசந்தன் கூத்து நிகழ்த்தப்படுவதால் பெண் பிள்ளைகள் கோயிலுக்குள் அனுமதிக்க முடியாத நேரங்களாயின்(தீட்டு காரணமாக) அவர்களால் ஆற்றுகையினை நிகழ்த்த முடியாது.ஆனால் ஆண் சிறுவர்களுக்கு எந்த ஒரு தடையும் இன்மையால் இது பெண் சிறுவர்களுக்கு கற்றுத்தரப்படுவதில்லை என்பது காரணமாகக் கூறப்படுகின்றது.

"பெண்கள் மேல் ஏற்றப்படும் துடக்கு மற்றும் பெண்ணின் நடத்தையை மையமாக வைத்துப் பயன்படுத்தும் தூசண வார்த்தைகள், பழமொழிகள், மொழி என அனைத்துமே பெண்ணை கலாச்சார சட்டத்திற்குள் வைத்துப்பூட்டும் செயற்பாடாகவே அமைகின்றது. மொத்தமாக நோக்குமிடத்து தமிழ்க் கலாச்சாரம் என நாம் நினைத்துக் கொண்டிருக்கும் கூட்டுக் கலாச்சாரம் பெண்கள் மீது அநாகரிகமாக நடந்து கொள்வதனையே காணமுடிகின்றது. பெண்கள் மீது கலாச்சாரம் திணிக்கும் வன்முறைகள் அரசியல் நிலைப்பட்ட கோஷமாக இன்று நோக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது."(செல்வி.தி,2000, பக் 61-62) எனப்படுவதன் மூலமும், "மரபுக்கலைகளில் பெண்கள் பங்கேற்க மதம் சார்ந்த சடங்குகள் முன்வைக்கும் சுத்தம் தீட்டு போன்றவற்றை காரணம் காட்டி மறுக்கப்பட்டது."(மங்கை.அ, 2001,பக்.141) எனக் கூறுவதன் மூலமும், சமயங்கள் மூலமாக சமூகம் முன்வைக்கும் சட்டதிட்டங்களால் பெண் மறுப்புக்கள் மரபாகிப் போய்விட்டமையினைக் காணலாம்.

**சமூகத்தின் மரபு ரீதியான காரணங்கள்**

பெண்கள் பற்றிய மரபு ரீதியான இரண்டாம் நிலை எண்ணப்பாடு சமூகத்தினால் தீர்மானிக்கப்பட்டு அன்று தொட்டு காணப்படுகிறது.அதாவது பெண்கள் மென்மையானவர்கள் அவர்களால் கடினமான வேலைகள் செய்ய முடியாது.நீண்ட நேரம் செலவழித்து எதனையும் செய்ய இயலாது.களைத்து விடுவார்கள்.பலமில்லாதவர்கள்….. போன்ற காரணங்கள் கூறப்படுகின்றன.இந்தக் காரணங்களால் பெண் சிறுவர்கள் இரு தடி கொண்டு வசந்தனாடுவது என்பது இயலாத காரியம்.அதனால் பெண் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கப்படுவதில்லை என்பன காரணங்களாக கூறப்படுகின்றன.

இவையாவும் ஒரு வகையில் ஆண் மேலாதிக்க கருத்துருவாக்கங்கள் என்றே கருத வேண்டியுள்ளது.பெண்கள் பற்றிய இவ்வாறான ஆணாதிக்கச் சித்தரிப்புக்களை இல்லாமற் செய்ய வேண்டும்.

"ஆண்களின் மேலாதிக்கத்தை முடிவுக்கு கொண்டு

வருவதனைச் சாதிக்க ஆணாதிக்கச் சமூகம்

எங்களுக்கு வழங்கியுள்ள பண்பாட்டு அமைப்பை,

கலையை, மதத்தை சட்டங்களை அதன் தந்தை

வழிப்பட்ட தனிக்குடும்ப அமைப்பை மற்றுமுள்ள

அதன் அனைத்துப் படிமங்களை, நிறுவனங்களை,

பழக்கவழக்கங்களை நாங்கள் ஒன்றுவிடாமல் அழித்து

ஒழித்தே ஆக வேண்டும்.ஏனென்றால் இவைகள்

எல்லாம் சேர்ந்துதான் எங்களை "ஒன்றுக்கும்

ஆகாதவர்கள்"என ஒதுக்கின.கண்ணுக்கு புலனாகாத

முறையில் எங்களைப் பலிகடாவாக்கின."

(K.K Ruthven.P.6)

(பஞ்சாங்கம்.க, 2008,பக்.79)

ஆண், பெண் வேறுபாட்டை வற்புறுத்துவோர் இயற்கையாகவே அவர்களிடையே அமைந்துள்ள உடல் வேறுபாட்டையும், பெண்கள் ஆண்களிலும் உடல் பலத்தில் குறைந்தவர்களாக இருப்பதையும் எடுத்துக்காட்டுவர். பெண்களின் இயற்கையான நுண்ணறிவுத்திறன் கூட ஆண்களை விடக் குறைவாக இருக்கிறது என நிறுவ முற்படுவர். இத்தகைய போக்கு அன்றும் இருந்தது, இன்றும் உள்ளது. தமது காலத்தில் காணப்பட்ட இத்தகைய வாதத்திற்கு பின்வருமாறு பதிலளித்தார் பாரதி.

“ ஆண்பாலார்க்கும் பெண்பாலார்க்குமுள்ள வித்தியாசம்

இளமையிற் பழக்கத்தினாலேயே என்று நாம் கொள்ள

வேண்டியிருக்கிறது. பெண்பாலாரை அபலைகள், அ.்.தா

வது பலமில்லாதவர்கள் என்கின்றோம். இதற்கு காரணம்

பெற்றோர் முதலிய பெரியோர்களேயாவர். பெண்

குழந்தைகளைக் கல்வியிலும், சரீரப் பயிற்சியிலும் பழக்

காமல் ஆண் குழந்தைகளுக்கு மாத்திரம் அவை இருந்தாற்

போதுமென்றெண்ணிப் பெற்றோர்கள் இவ்வாறு செய்த

னர் போலும்! புத்தி விரிவதற்கும் தைரியம் முதலியன

பெருகுவதற்கும், பெண்பிள்ளைகட்கு இடங்கொடாமல்,

அவர்களை ஒருவழியிலும் செல்லவொட்டாமல் கல்வியுங்

கற்பியாமல் வீட்டுவேலைகள் செய்வதிற் பழக்கி மடைப்

பள்ளிக்குரிய மடையர்களாக்கிப் புருஷர்களுக்கு சிற்றின்

பம் தரும் மிருகங்களே போன்று மக்களைப் பெறுவதற்

கான யந்திரங்களாய் மாத்திரம் அவர்களை வளர்த்து

விட்டார்களே… இங்ஙனம் வெகுகாலமாய் வளர்க்கப்

பட்டு வரவே இரண்டொரு தலைமுறையிற் பழக்கத்

தினாலேற்பட்ட மடமையும், பலக்குறைவும் பின்வரும்

தலைமுறைகளிற் பிறக்கும் சிறுமியர்க்கு இயற்கையிலே

ஏற்படுகின்றன”

மேற்கண்டவாறு கூறி ஆணுக்கு பெண் இளைத்தவள் என்னும் கருத்தை அடியோடு மறுத்தார் பாரதி. இவ்விடத்தில் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். வரலாற்று அடிப்படையில் நோக்கும் போது சமுதாயத்தில் வர்க்க வேறுபாடுகள் தோன்றிய காலத்திலிருந்தே, பெண்ணினமும் சமுதாயத்தில் சம உரிமையையும், அந்தஸ்தையும் இழந்தது என்பது புலனாகும். (சித்திரலேகா.மௌ, 1996, பக்.26-27)

இவ்வாறான ஆணாதிக்கச் சிந்தனைகள் சமூகம் சார்ந்து பரந்தளவில் கேள்விக்குள்ளாக்கப்பட்டு தள்ளுபடிக்கு உள்ளாகும் நிலையில் பால்நிலையினை வேறுபட்ட வித்தியாசமான கண்ணோட்டத்தில் பார்க்கும் அசமத்துவப் போக்குகள் மாறி சமத்துவ ரீதியில் சமூகங்கள் செயற்படும் தன்மைகள் வலுப்பெறும்.

பால்நிலை தொடர்பாக சமூகம் வடிவமைத்த பாத்திரச் செயற்பாடுகளே வேறுபாடுகளுக்கு காரணம் என உறுதி செய்யப்பட்டது.மொழி சார்ந்த ஆற்றல்களில் ஒப்பீட்டளவில் பெண்கள் மேலோங்கியிருந்தாலும் கணிதம், விஞ்ஞானம் முதலான பாடங்களின் ஆற்றல்களில் ஆண்கள் மேலோங்கியிருத்தலும் பொதுவான தோற்றப்பாடுகளாகவுள்ளன.இந்த வேறுபாடுகளை உயிர் மரபுக் காரணிகளுடன் தொடர்புபடுத்தி முன்னைய ஆய்வாளர்கள் விளங்கினார்கள்.பின்னர் இக் கருத்து தள்ளுபடிக்கு உள்ளாயிற்று.(ஜெயராசா.சபா ,2007, பக் 78)

இவ்வாறான தள்ளுபடிக் காரணங்களான உயிர் மரபுக் காரணிகளை முன்வைத்தே வசந்தன் ஆட்டத்தினை பெண்களால் ஆட முடியாது, ஆடுவது கடினம்,ஆண் சிறுவர்களால்தான் வலிமையாகவும் விரைவாகவும் ஆட முடியும் போன்ற வலுவற்ற கருத்துக்கள் வேரூன்றப்பட்டு காலம் காலமாக கூறப்பட்டு வருகின்றதே அன்றி மாற்றங்களில் முயற்சிப்பதற்கு முன் நிற்பார் இல்லை போன்றே தெரிகின்றது.

இவ்வகையான காரணங்கள் அறிவு ரீதியாக ஏற்றுக் கொள்ள முடியாதவை என்பது தெளிவு.ஏனெனில் யாரால் எது இயலும் எது இயலாது என எவரும் வரையறுத்து விட முடியாது. ஏனென்றால் ஒரு பெண் தன் கர்ப்பப்பையால் சமைப்பதில்லை.(கம்லா பாசின், 2009, பக்10)எனவே இந்த வேலையை இவர்தான் செய்ய வேண்டும் என்ற எந்தவித நிர்ப்பந்தமும் இயற்கையாகி விட முடியாது.

கல்விச் சேவையே எதிர்கால அரசியல் தலைவர்களையும் சிவில் சேவையாளர்களையும் தயார்படுத்தும் துறையாக இருப்பதனால் பால்நிலை சமத்துவத்தை கல்வித்துறையுள் முன்னெடுத்தல் பொதுசன சேவைக்கு உத்தி ரீதியான முக்கியத்துவமுடையதாகிறது.கல்வித் துறையில் பால்நிலை அணுகுமுறை மிகவும் குறிப்பாகப் பொருத்தமுடையதாகின்றது. ஏனெனில் பொது நலவாயத்தில் சில பிராந்தியங்களில் இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் மாணவர்களிலும் மேலான செயற்திறனுடையவர்களாக மாணவிகள் காணப்படுகின்றார்கள்.(ஜெயசங்கர்.சி.மொழிபெயர்ப்பாளர்,2004,பக்.22) ஆகையால் பெண் சிறுவர்கள் இயலாதவர்கள்.வலிமையில்லாதவர்கள் என்கிற மாறுபாடான கருத்துக்கணிப்புக்களுக்கு அப்பால் சென்று கலைச் செயற்பாடுகளில் பங்கெடுக்கப் பண்ணுதல் வேண்டும்.எனவே மூடத்தனமான காரண காரியங்களுக்கு அப்பால் ஆக்கபூர்வமாக சிந்திக்க வேண்டும்.

கலை எனப்படுவது சந்தோசத்தை தரவல்லது.ஆற்றுகை கலைகளில் ஈடுபடும் பொழுது இயல்பாகவே உடலும் உளமும் வலுப்பெறுவதனைக் காணலாம்.உடற்பயிற்சி மூலம் உடலும் உளமும் தென்புடன் இருக்கும் என்றால் கலைப் பயிற்சிகளால் உற்சாகமும் உடற் சமநிலையும் அதிகரிக்குமே அன்றி குறையாது.அத்தோடு கலையானது கற்பனைத்திறனை அதிகரிக்கும்.எனவே சிந்திக்கும் ஆற்றல் பன்மடங்காகும்.

பாடசாலைச்சூழல் எனும் போது இங்கு அதிபரை மையப்படுத்திய பாடசாலை நிர்வாகம் காணப்படுகின்றது. இங்கு மாணவர் சார் கலைச் செயற்பாடுகளுக்கே ஊக்கமளிக்கப்படும். பெரும்பாலும் இவை போட்டிகளை மையமாக கொண்டே நடக்கின்றன. ஆனால் சமூகப் பாரம்பரியக் கலைகளைக் கற்பித்தல் பாடத்திட்டத்தில் உள்ளடக்கி அதனைச் செயன்முறையாக கற்றல் என்பது அவசியமானது எனும் கொள்கைத்திட்டமிடலினை பரவலாக்கல் என்பது பாடசாலை கல்வியில் இல்லை என்றே கூறவேண்டும்.கூத்துப்(வடமோடி தென்மோடி)பற்றி போட்டிகளுக்காகவும் கல்விப்பாடத்திட்டத்தில் சிறிதளவுமே அணுகுகின்றனர்.ஏனைய பாரம்பரிய கலைகளை மாவட்டங்களின் எல்லைப்பகுப்பின் அடிப்படையில் கூட பாடத்திட்டத்தில் உள்வாங்கவில்லை.சிறுவர்கள் எல்வோரும் சிறுவர்சார் பாரம்பரிய கலைகளை பாடசாலைக்கு அப்பால் கற்றுத்தெளிதல் என்பது சாத்தியமில்லை. அவற்றினை ஆண் பெண் வேறுபாடின்றி சமத்துவ ரீதியில் குழுவாக கற்றல், பயிலுதல் என்பவற்றை கல்வியில் அத்தியாவசியமாக்குதல் மூலம் சிறுவர்கள் அவற்றை பயிலவும் எதிர்காலத்தில் அக் கலையை எவ்வாறெல்லாம் பிரயோகிக்கலாம் போன்ற கற்பனை வளத்தையும் பெறுவர்.

சிறுவர்களுக்கு அடிப்படையான உடல் உள சிந்தனை வளர்ச்சியை தரக்கூடிய கலைச்செயற்பாடுகளை ஆண் சிறுவர்களுக்கு வேறாகவும் பெண் சிறுவர்களுக்கு வேறாகவும் பிரித்துப்பார்ப்பது துரோகமான செயலாகும்.பால்நிலை சமத்துவத்தை சிறுபராயத்திலே வலியுறுத்த வேண்டிய சூழ்நிலையில் சமத்துவமற்ற வெளிப்பாட்டுச் சிந்தனையை சிறுவர்கள் மனதில் ஆழப்படுத்துவது ஆரோக்கியமற்றது.

முதலாளித்துவக் கல்வி மக்களை வலுவிழக்க வைத்து இதை செய்ய முடியாது அதைச் செய்ய வராது அதற்கெல்லாம் மிகச்சிறந்த மூளை வேண்டும் என நினைக்க வைக்கின்றது. அறிவுத் தேர்ச்சியை காணக் கிடைக்காத அதிசயமாக்கி எதார்த்தத்தையும் புறம் தள்ளும் கல்வி முறை அது.மக்களுக்கு அவரவர் திறமை மற்றும் பண்புகளில் நம்பிக்கையளித்து தடைகளைத் தகர்க்கும் சக்தி ஊட்டி தம்மை ஆளும் விதிகளை நிர்ணயிக்கக் கூடியவர்களாக மாற்றாமல் இக் கல்வி முறை அவர்களது போதாமையை உணரவைத்து தம் வாழ்நிலைகளை மாற்றும் திறனற்றவர்களாக ஆக்கி விடுகிறது.அவர்கள்

தம்மிலிருந்தும் தாம் வாழும் சமூக இயற்கைச் சூழலில் இருந்தும் அந்நியப்பட்டுப் போகின்றார்கள்.(கூகி வா தியாங்கோ,2004,பக்.68)

இவ்வாறான கிராமிய முதலாளித்துவ சிந்தனைகளை சட்டங்களை விடுத்து சிறுவர்கள் அனைவரயும் சிறுவர்களாக மாத்திரமே எண்ணும் மனோபாவம் மேலோங்க வேண்டும்.

பெண் ஆண் குழந்தைகளுக்கிடையே உள்ள ஒற்றுமைகளை ஊக்குவிப்பதற்குப் பதிலாக இந்த சமுதாயம் வேற்றுமைகளை அழுத்திச்சொல்கிறது.அதனால்தான் பெண் குழந்தைகளும் ஆண் குழந்தைகளும் வேறுவிதமாக வளருகிறார்கள்.அவர்களுடைய வழிகளும் வேறாகி விடுகின்றன. இத்தகைய வேறுபாடுகள் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே உள்ள முரண்பாடுகள் மற்றும் மோதல்களுக்கு காரணமாகிறது.(கம்லா பாசின்,1997,பக் 35) ஆனால் சிறுவர்கள் இயல்பாகவே வேறுபாடின்றி ஒற்றுமையாக ஆடிப்பாடி விளையாடி மகிழ்வது நம் கண்முன்னே நடக்கும் பொதுவான ஒரு விடயமாகும்.ஏனெனில் அவர்களிடம் வேற்றுமை இல்லை, கபடம் இல்லை ஒத்த வயதுடையவர்களிடம் ஒற்றுமை தன்மையை நாம் காண முடிவது இதனால்தான். எனவே பாகுபாட்டை ஏற்படுத்தும் சமூக பண்பாட்டு நடைமுறைகளை மாற்றியமைக்க வேண்டும்.சாதி வர்க்க இன சமத்துவமின்மை எப்படி மனிதர்களால் உருவாக்கப்பட்டதோ அவ்வாறுதான் கலைகளும் கட்டமைக்கப்பட்டுள்ளன. பெண்கள் தொடர்பாக சமூகம் மேற்கொண்ட கட்டுமையை மாற்றியமைப்பதற்குக் கல்வியும், கருத்தேற்றமும் வலிமையான சாதனங்களாகும்.(ஜெயராசா.சபா,2007,பக்.62)

கல்வி என்பதனுள் கலைச்செயற்பாடுகள் கலையைப் பயிலுதல் என்பதன் மூலமும் அனைத்து கலைகளையும் பயில்வதற்கான சம வாய்ப்புக்களை இரு பால் சிறுவர்களுக்கும் பெற்றுக் கொடுக்க வேண்டும்.ஒன்றைப் பழகுதல் அது சார்ந்து ஆழமாக தெரிந்து கொள்ளல் அதில் பரீட்சயமாகுதல் போன்றவை சிறுவர்களின் விருப்பிலும் அர்ப்பணிப்பிலும் தங்கியுள்ளது.ஆனால் கலையைப் பயில்வதற்கான வாய்ப்புக்களை பாகுபாடற்ற முறையில் வழங்க வேண்டியது சமூகத்தினதும் பாடசாலையினதும் பாரிய பொறுப்பாகும்.சிறார் தம்மை உருவாக்கிக் கொள்ளும் செயல் அவர்களுக்குரிய கல்வியால் நெறிப்படுத்தப்படுகின்றது.எனவே கலைத்திட்ட கல்விச் செயற்பாடுகளில் சிறுவர்கள் ஈடுபடும் பொழுதும், சேர்ந்தியங்கும் பொழுதும் ஒற்றுமையினையும் சமத்துவத்தினையும் புரிந்து கொள்வதோடு சமத்துவமான சமாந்தரமான முறையில் சூழலையும் சமூகம் சார் அங்கத்தவர்களையும் விளங்கிக் கொள்வதோடு அதற்கேற்ற புரிதலோடு தம்மையும் சமூக வளப்படுத்தலுக்கு ஏற்ற விதத்தில் உருவமைத்துக் கொள்ளும் சிந்தனையும் பக்குவமும் சிறுவர்களுக்குள் உருவாகத் தொடங்கி விடும்.

இவ் ஆய்விற்காக கள ஆய்வில் ஈடுபட்டபொழுது ஆசிரியர்கள்,ஆசிரிய ஆலோசகர் போன்றோரிடம் பால்நிலை வேற்றுமை பாராது வசந்தன் கூத்தினை பயிற்றுவித்தல் பற்றி கலந்துரையாடிய பொழுது நடன ஆசிரியர் கூறியமை குறிப்பிடத்தக்கது."இங்கு நூற்றிற்கு ஐம்பது வீதமான மாணவர்களே வசந்தன் கூத்துப் பார்த்துள்ளனர்கள். எல்லோருக்கும் தெரியாது .ஆறாம் வகுப்பு பெண்பிள்ளைகளுக்கு வசந்தன் ஆட விருப்பம் ஆனால் வாய்ப்பில்லை.ஆண்கள் ஆடுவதால் நாங்கள் ஆடமுடியாது போல் எண்ணுகிறார்கள்.இரு பாலாரையும் இணைத்து செய்வது பற்றி நீங்கள்தான் முதலில் கேட்கிறீர்கள்.நல்ல விடயம்.நடனம் ஆடுபவர்கள் வசந்தன் ஆடமுடியும்.அதிகமாக கஸ்ரப்பட்டு ஆடும் ஆட்டங்கள் வசந்தனில் இல்லை.பெண் சிறுவர்களும் ஆடினால் அழகாய் இருக்கும். (திருமதி .ம. தேவகுமார்) என்று கூறிய விளக்கம் நோக்கத்தக்கது.இன்னுமோர் ஆசியரது கருத்து பின்வருமாறு "வசந்தன் கூத்தினை ஆண்களுக்கு மட்டும் என வைத்துக்கொண்டு பெண் பிள்ளைகளுக்கு வெறுமனே வசந்தன் கூத்து என்றால் என்ன? எனும் அறிமுறை சார்ந்த விடயங்கள் மட்டும் போதுமென்றுள்ளனர்.ஊரில் ஆண்சிறுவர்கள் ஆடினர் எனக் கேள்வியுற்றால் அவர்கள் எமது பாடசாலை (களுதாவளை மகா வித்தியாலயம்) மாணவர்களாகையால் பாடசாலையில் அவர்களை வசந்தன் ஆடச்சொல்லி பெண் பிள்ளைகளை பார்க்க வைப்போம். அதைப்பார்த்து விட்டு நிறைய பெண் சிறுவர்கள் இணைந்து ஆட விருப்பம் என்கின்றனர்.ஆனால் நாங்கள் கேட்க முடியாது.நாங்கள் ஒரு சமயம் சிறுவர் கூத்து ஒன்றில் பெண்ணியம் சார் கருத்துக்களை இணைக்க நினைத்த பொழுது அக் கூத்தின் அண்ணாவியார் முற்றாக மறுத்துவிட்டார்.வசந்தன் கூத்தும் ஏதோ தூரத்தில் இருக்கும் அந்நிய விடயமாகவே இருப்பது போல் தெரிகிறது. ஆனால் இருபாலாராலும் வசந்தன் ஆட முடியும்.'' (திருமதி.கீ.கௌரிபாலன்) என்று கூறியுள்ளமையும் கவனித்தற்பாலது. ஆசிரிய ஆலோசகர் ஒருவரது கருத்தும் பின்வருமாறு, ''அண்ணாவிமார்கள் இடத்துக்கிடம் வேறுமாதிரி இருக்கிறார்கள். ஊரில் வசந்தன் பழக்கும் பொழுது ஆண் சிறுவர்களுக்கு மாத்திரம் எனும் ஒருவித அதிகார நிலையிலும் வேறு இடங்களில் வேறு அதிகாரிகளின் தலைமையின் கீழ் பழக்கச் செல்லும் பொழுது ஒரு வித நெகிழ்வு நிலையிலும் காணப்படுகின்றனர். ஊரில் எமக்குத்தான் தெரியும் நாங்கள் சொல்வதுதான் சட்டம் என்று நடக்கின்றனர். ஏனெனில் தங்களை விட இன்னுமொரு நாயகன் (அவர் பாவித்த சொல் ƒ Hero") இருக்ககூடாது என்பது போல் இருக்கின்றனர். இவ்வாறு இவர்களது செயற்பாடுகளில் மாற்றங்கள் காணப்படுகின்றன.அத்துடன் இவர்களுக்கு பிறகு இக்கலையை தொடர்வதற்கு வேறு தலைமுறைகளுக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும். பழமை வாதத்தை விடுத்து சிந்திக்க வேண்டும்".(திருமதி.டேசிராணி ராஜகுமாரன்) என்றும் குறிப்பிட்டுக் கூறியிருந்தமையும் சிந்தனைக்குரிய விடயமாகவே தெரிகிறது.

இவர்கள் அனைவருடைய கருத்திலிருந்து வசந்தன் ஆட பெண் சிறுவர்களாலும் இயலும்.அவர்களுக்கும் அண்ணாவிமார் கற்றுக்கொடுக்க வேண்டும் எனக்கூறுவதோடு ஆனால் இக் கூத்தின் பால் அதிகாரம் கொண்டவர்கள் ஆண்சிறுவர்களை வேறாகவும் பெண் சிறுவர்களை வேறாகவும் பார்க்கின்றனர். எனக் குற்றம் சாட்டுவது போன்று தெரிகின்றது.

இவர்கள் கூறுவது போன்றும் ஆக்கபூர்வமான வாய்ப்புக்களை சிறுவர்களுக்கு வழங்காது அர்த்தமற்ற காரணங்களை கூறிக் கொண்டிருப்பதால் பாரம்பரியக் கலைகளின் முன்னெடுப்பு பிற்போக்காக முடிவடையும் அபாயம் தோன்றிவிடும்.வசந்தன் கூத்தினை பெண் சிறுவர்களுக்கு பழக்காமைக்கு காரணங்கள் கூறுபவர்கள் (வசந்தன் கூத்தினை முன்னெடுப்பவர்கள் ) தமது ஊர் சூழலுக்கு அப்பால் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும், நிகழ்வுக்காகவும், போட்டிக்காகவும் மாணவர்களுக்கு(ஆண் பெண் இருபாலருக்கும்) பழக்கும் சந்தர்ப்பங்கள் சில இடங்களில் உண்டு. ஆனால் எல்லா சிறுவர்களும் பயன் பெறுவதில்லை. வசந்தன் கூத்தினை கற்றுக் கொடுப்பதற்கு(தம் சூழலில்) வரையறைகள் போடும் இவர்களால் எவ்வாறு இன்னொரு சூழலில் கற்றுக் கொடுக்க முடிகின்றது? நியாயங்களை கண்டுபிடிப்பவர்கள் தமது கண்டுபிடிப்புகளை எல்லா இடத்திலும் கடைப்பிடித்தே ஆக வேண்டும்.ஆனால் அவ்வாறில்லை. இது இரட்டை வேசமாகவே தெரிகிறது.இவ்வாறான குறுகிய மனப்போக்குகளை விடுத்து கலைகளை கலைகளுக்காக முன்னெடுக்கும் மனோபாவங்கள் உருவாகும் போது சமூகத்தில் படைப்பாக்கம் கொண்ட கலைஞர்கள் செறிந்து காணப்படுவதோடு கலைகளும் என்றும் நிலைத்து நிற்கும். வசந்தன் கூத்தைப் பொறுத்தவரை சிறுவர்களே கலைஞர்களாவர். அவர்களே பெரியவர்களானதும் இக்கலையினை முன்னெடுக்கும் பெரும் கலைஞர்களாகவும் திகழ்வர்.

ஊர்ச் சூழலில் அண்ணாவிமார்கள் ஊர்க்கலைஞர்கள் முதியோர்கள் வசந்தன் கூத்தினை கற்றுக் கொடுப்பதில் மாற்றங்களை கொண்டுவர முன்வரவேண்டும்.சிறுவர்களிடம் சமத்துவமின்மையை பாராது சிறுவர்களை சிறுவர்களாக மட்டும் பார்க்க வேண்டும்.தமது கிராமங்களுக்கு அப்பால் வசந்தன் கூத்தினை பால் வேறுபாடு பாராது கற்றுக் கொடுப்பவர்கள் அதே போன்று கோயிலைத் தவிர்த்து வேறு நிகழ்வுகளுக்கு ஆற்றுகை செய்யும் வண்ணம் ஊர்களில் பழக்குவதற்கு முன்வர வேண்டும்.இவ்வாறு நடப்பின் பால்நிலை சமத்துவத்தினை பேணும் வகையில் இச் சிறுவர் கூத்து வலிமையடையும்.

உதாரணமாக, கூத்தினை காலம் காலமாக கிராமங்களில் விடிய விடிய ஆண் கூத்தர்களே ஆடினார்கள். பெண் வேடங்கள் கூட ஆண்களாலே ஆடப்பட்டன. குறிப்பாக வித்தியானந்தனின் வருகைக்கு பின்னர் இந்நிலை மாறி இன்று நகர்ப்புறம் வரைக்கும் வந்ததல்லாமல் ஆண்களும் பெண்களும் இணைந்து கூத்தாடும் பாரிய பாய்ச்சல் கூத்து (வடமோடி, தென்மோடி) ஆற்றுகையில் காணப்படுகின்றது.

முற்போக்கு சிந்தனைகளுக்கூடாகவும் உரையாடல்களுக்கூடாகவும் கூத்து ஆற்றுகையானது இன்று இவ்வாறு பல படிமுறை வளர்ச்சிகளை கண்டுள்ளது. இதற்கு காரணம் பால்நிலை வேறுபாடின்றி கலைஞர்களை கண்டு பிடித்தமை, வாய்ப்பளித்தமை ஊக்குவித்தமை, கற்றுக்கொடுத்தமை என்றால் அது பொய்யாகாது.

பின் நவீனத்துவ பார்வையானது விடுபட்டவற்றையும் முதன்மைப்படுத்துவதை காணலாம். பின் நவீனத்துவத்தின் செல்வாக்கு கல்வியிலும் கலைத்திட்டத்திலும் பன்முக நோக்கைத் தூண்டியுள்ளது. கல்வி அனுபவங்கள் ஒடுங்கிய பாய்ச்சலாக செல்லாது பல துறைகளில் அறிவைத் திரட்டுதல் பன்முக ஆற்றுகைகளை வளர்த்தல் பாராமுகமாக விடப்பட்டவற்றின் மீது அறிவைத் திருப்புதல் முதலிய அறிவுச் செயற்பாடுகளை பின்னவீனத்துவம் மீள வலியுறுத்தி நிற்கின்றது. (ஜெயராசா.சபா,2007,பக்.95)

வசந்தன் கூத்தினை பொறுத்தவரை பெண் சிறுவர்கள் பாராமுகமாகவே காணப்படுகின்றனர்.பன்முக ஆற்றல்களை வளர்த்துக்கொள்வதற்கும் வசந்தன் கூத்து சார்ந்த செயன்முறை அறிவை பெறுவதற்குமான வாய்ப்புக்கள் சரிசமமாக பெண் சிறுவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.இதுவரை வசந்தன் கூத்தில் கவனத்தில் கொள்ளப்படாத பெண் சிறுவர்களை வசந்தன் கூத்தின் அண்ணாவிமார்கள் கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

எமது சமூகம் சார்ந்த எமது அடையாளம் கூறும் கலைகள் பற்றி தெரிந்திருத்தல் பழக்கப்படுதல், பரீட்சயமாகுதல் என்பவை சிறுவர்களுக்கு அவசியமாகும்.ஏனெனில் பாரம்பரிய கலைகளை அடுத்த தலைமுறைக்கு வழி வழியாக கொண்டு செல்லப்போகின்றவர்கள் அவர்களே. அதிலும் குறிப்பாக சிறுவர்கள் அவர்களுக்கே உரித்தான கலைகளில் ஈடுபடல் என்பது மிகவும் அவசியானதாகும்.அவற்றிற்கு சிறுவர்கள் இலகுவில் பரீட்சயமாகும் வாய்ப்புக்கள் அதிகம்.

இதற்கான வாய்ப்புக்களை வழங்க வேண்டியது பாடசாலையினதும் சமூகத்தினதும் கடமையாகும்.பால்நிலை சமத்துவத்தை நோக்கி இலங்கையின் கல்விச் செயற்பாடுகளைப் பல பரிமாணங்களில் முன்னெடுக்க வேண்டியுள்ளது.கல்வித் திட்டமிடல், கலைத்திட்டசெயற்பாடுகள், கல்விநிர்வாகம், கல்விக்கான நிதி மற்றும் வளப்பங்கீடு, ஆசிரியவாண்மை உருவாக்கம் போன்ற பல பரிமாணங்களினூடாகவும் முன்னெடுக்கும் பொழுதுதான் உரிய இலக்குகளை அடைய முடியும் (ஜெயராசா.சபா,2007,பக்.80).தம் வாழ்க்கையை சிறுவர்கள் பாடசாலையிலும் சமூகத்திலுமே கழிக்கிறார்கள்.எனவே பிள்ளை வாழும் சூழலாகிய சமூகமும் பாடசாலையுமே வேறுபாடற்ற முறையில் சிறுவர்களை அனைத்து சிறுவர்சார் செயற்பாடுகளிலும்

கலைகளிலும் ஈடுபடப்பண்ண வேண்டும்.இவ்வாறு நடக்கின்ற பொழுது சிறுவர்கள் தாம் வாழும் சமூகம் பற்றியும் அதன் பிரச்சனைகள் தேவைகள் பற்றியும் சிந்தித்து உணர்வுபூர்வமாக செயற்படும் விதத்தில் உருவாகுவார்கள்.

ஒருவர் ஆளுமையுடையவர்களாக உருவாவதற்கான சாத்தியப்பாடுகளை நமது கல்வி முறை அவனுக்கு வழங்குவதில்லை.சரியான முறையில் பயிற்றப்பட்டால் அவன் தன்னை எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான புதிய வழிமுறைகளை ஆழமாகத் தேடமுடியும்.எவராலும் கற்க முடியும் என்று கூறுகின்ற அரங்க கலைஞரும் புதிதளித்தல் அரங்கில் (improvizational Theatre)முக்கியமானவராகவும் கருதப்படுகின்ற வயாலோஸ் பாலின்(violospolin)சூழல் இடம் தரும் எனில் எவரும் தான் கற்க விரும்புவதை கற்றுக்கொள்ளலாம் என்றும் எந்த ஒரு தனிமனிதனும் தாம் தாம் இடம் தருவார்களெனின் சூழல் தான் அவருக்குக் கற்பிக்க வேண்டிய எல்லாவற்றையும் கற்பிக்கும் என்றும் இதில் ''திறமை'' ''திறமையின்மை'' என்பதற்குப் பெரிதாக இடம் எதுவும் இல்லை என்றும் கூறுகின்றார்.நமது கல்வி முறையில் இந்நிலைமையில்லை.இங்கு சூழலும் இடம் தருவதில்லை. நாமும் நமக்கு இடம் தருவதில்லை. (சிவத்தம்பி கார்த்திகேசு பதிப்பாசிரியர், 1996,பக்.71) எனக்கூறுவதிலிருந்து கிராமத்தில் இரு பாலாருக்கும் பழக்கமுடியாத வசந்தன் கூத்தினை பாடசாலை சூழலில் சிறுவர்களுக்கு ஏற்படுத்தி கொடுப்பதன் அவசியமும் , வழிமுறையும் தெளிவாகின்றது.

புதிய அறிவையும் ஆற்றல்களையும் பெறவதற்குத் தேவையான கற்றல் திறன்களை பிள்ளைகளுக்கு வழங்குதல் வேண்டும்.சிறந்த மனிதனையும்,சிறந்த ஒரு உலகையும் உருவாக்கும் நோக்குடையதாக கற்றல் அமைய வேண்டும்.சிறந்த கல்வித்தத்துவ ஞானியான அரிஸ்ரோட்டிலின் சிந்தனையொன்றினை இதற்கு ஆதாரமாக காட்டலாம். "What you want in a state you must put it in the school" எனத் தனது கல்விச் சிந்தனையில் கூறியுள்ளார்.அரசு பால்நிலை சமத்துவத்தினை ஒரு நாட்டில் ஏற்படுத்த வேண்டுமாயின் அதனை முதலில் பாடசாலையிலே போடவேண்டும். பாடநூல்களில் அதனை சேர்க்க வேண்டும்.எவ்விதமான சமுதாயத்தை உருவாக்கவேண்டும், எப்படிப்பட்ட பிள்ளைகளை உருவாக்க வேண்டும் என்பது கல்வித் தத்துவத்தினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. (மதுசூதனன்.தெ 2007,பக்.20-21) எனவே கலைப்பயிற்சிகள்,செயற்பாடுகளுக்கூடாக சேர்ந்து இயங்கும் பிள்ளைகள் தம்மளவில் புரிந்துணர்வினையும் சமத்துவத்தினையும் பெற்றுக்கொள்ளும் போது பிறிதொரு சந்தர்ப்பத்தில் பால்நிலை அல்லது ஆணாதிக்கம் சம்மந்தமான பிரச்சனை ஒன்றில் தனது நியாயமான பங்களிப்பினை வழங்கும்.எனவே சிறுவர்களுக்கிடையே பேதம் பாராது உளமுதிர்ச்சிக்கேற்ற வகையில் அறிவினை வழங்கக்கூடிய நெகிழ்ச்சி தன்மையான கலைத்திட்டங்கள் கலைச்செயற்பாடுகள் அவசியமானவையாக காணப்படுகின்றன.அந்த வகையில் வசந்தன் கூத்தினை பாரபட்சமின்றி சிறுவர்கள் கற்பதற்கு அதனை பாடசாலையில் ஆரம்பிப்பதன் அவசியம் வலுப்படுவதனைக் காணலாம்.

**முடிவுரை**

வசந்தன் கூத்தினை சிறுவர்களுக்கிடையே பேதம் பாராது கற்றுக் கொடுப்பதற்கு முன்வர வேண்டும். இது இருவகைச் சூழலிலும் இடம்பெற வேண்டும். வசந்தன் கூத்தானது சிறுவர்களுக்கு என்றே உருவாக்கப்பட்டுள்ள சிறுவரை மையப்படுத்திய ஒரே ஒரு பாரம்பரியக்கூத்து. சிறுவர்களுக்கான கலைகளை பயில்வதற்கான உரிமைகளை அளித்தல் ஒவ்வொருவரதும் கடமையாகும். எனவே கலைத்திட்டத்தில் உள்வாங்கும் பொழுது செயன்முறையாகக் கற்பிப்பதற்கு உரிய அண்ணாவிமார்களை வரவழைத்து அல்லது குறித்த ஆசிரியர் முன்னின்று பயின்று பழக்குவதாகவோ வசந்தன் கூத்தினை பாடப்பரப்பில் உள்வாங்குவது முக்கியமாகும். அப்பொழுதுதான் இக்கலை வடிவம் சிறுவர்களிடையே ஆண், பெண் பாரபட்சமின்றி சென்றடையும். இவ்வகையான ஆட்டக்கோலங்களை கற்றல், பயிற்சி செய்தல் மூலம் சிறுவர்கள் உடல், உள வலிமை மற்றும் ஆளுமை விருத்தி போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதுடன் தமக்கான பாரம்பரியக் கலைக்கு உரித்துடையவர்களாவதுடன் இக்கலையினூடாக சமூகம் பயன் பெறும் வகையில் பல விழிப்புணர்வுக் கருத்துக்களை எடுத்துரைக்க கூடியவர்களாகவும் திகழ்வர். ஏனெனில் சமூகக் கலை மூலம் கூறப்படும் சமூகம்சார் விழிப்புணர்வுக் கருத்துக்கள் மக்களை இலகுவாக சென்றடையும். பொதுவான கல்வித் திட்டமிடல் மாணவரின் பன்மையான இயல்புகளைக் கருத்திலே கொள்ளாதவையாயும் பால்நிலைச் சமத்துவத்தை முனைப்பாக கொள்ளாதவையாயும் அமைந்துள்ளன. இவ்வாறான குறைகளை நீக்கும் வகையில் கல்வியைத் திட்டமிடல் வேண்டும். மாணவர்களால் ஈட்டப்பட வேண்டிய பிரதான இலக்குகளையும் துணை இலக்குகளையும் தெளிவாக்கி கலைத்திட்டத்தை இயக்கமுறச் செய்வது தலையாய செயற்பாடாகின்றது.

அத்தோடு சமாந்தரமாக ஊர்ச்சூழலிலும் அவற்றிற்கான வேண்டுகோள்களை முன்வைத்து மாற்றங்களை கொணர்ந்து ஆண் பெண் சிறுவர்களை உள்வாங்கி பயிற்றுவித்து இன்னும் நீண்டகாலம் இப் பாரம்பரியக் கலை பயணிப்பதற்கு ஆவண செய்தலும் அதனை ஊர்க்கலைஞர்கள் பெரியோர்கள் உணர்ந்து ஏற்றுக்கொள்ளுதலும் அவசியமாகும்.

**துணை நூற்பட்டியல்**

1. செல்வி,தி.(2000). சமூகக்கோட்பாட்டுத்தளத்தில் பால்நிலை.பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்.
2. மங்கை,அ.(2001). பெண்- ஆரம்பம்- தமிழ்ச்சூழல் .ஸ்னேகா. ராயப்பேட்டை.சென்னை
3. பஞ்சாங்கம்,க.(2008). நவீன இலக்கிய கோட்பாடுகள்(பஞ்சாங்கம் கட்டுரைகள்).காவியா வெளியீடு சென்னை.
4. சித்திரலேகா,மௌ. (1996). பாரதியின் பெண் விடுதலை. விபுலம் வெளியீடு. மட்டக்களப்பு. இலங்கை
5. ஜெயராசா,சபா.(2007). கல்வியும் பால்நிலைசமத்துவமும்.அகவிழி-3.டொறிங்ரன் அவனியு.கொழும்பு-7
6. கம்லா பாசின்,(2009) .பாலியலைப் புரிந்து கொள்வோம்.ஏக்தா – பெண்களுக்கான ஆதார மையம்.பெத்தேல் நகர்.மதுரை
7. ஜெயசங்கர்.சி.(மொழிபெயர்ப்பாளர்).(2004) பொதுசன சேவையில் பால்நிலையை பிரதானப்படுத்தல் ஒரு துரித வழிகாட்டி.சக்திபால்நிலை சம உரிமைக்கான செயற்திட்டம்.கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவரகம்.12 அமரசேகர மாவத்தை.கொழும்பு-5
8. .கூகி வா தியாங்கோ (தமிழில்.அ.மங்கை) .(2004). அடையாளமீட்பு. புதுச்சேரி. சென்னை
9. கம்லா பாசின்.(1997). பொண்ணுன்னா என்ன? பையண்ணா என்ன?.யாக்கோரி சி.54.சௌத்.எக்ஸ்ரென்சன் , பேஸ் 11.புதுதில்லி
10. ஜெயராசா,சபா.(2007). கல்வியும் பால்நிலைசமத்துவமும். அகவிழி-3.டொறிங்ரன் அவனியு.கொழும்பு-7
11. மேலது
12. சிவத்தம்பிஇ கா. (பதிப்பாசிரியர்)( 1996). கற்கை நெறியாக அரங்கு.நியு செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு .சென்னை
13. மது சூதனன் இதெ. (2007). ஆசிரியத்துவமும் பால்நிலை அறிக்கையும் . .அகவிழி-3.டொறிங்ரன் அவனியு.கொழும்பு-7

**தகவல் வழங்கியவர் விபரம்**

1.திருமதி .ம .தேவகுமார். நடன ஆசிரியை, .களுதாவளை மகாவித்தியாலயம்.

2.திருமதி.கீ.கௌரிபாலன் இசைஆசிரியை, .களுதாவளை மகாவித்தியாலயம்.

3. திருமதி.டேசி ராணி ராஜகுமாரன், .ஆசிரிய ஆலோசகர், பட்டிருப்பு கல்விவலயம்.